பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம், துரைமங்கலம் மஜிரா கவுல்பாளையம் கிராம ஊராட்சி கிராம ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலையில் : திரு. செ.கலைச்செல்வன்

ந.க.எண்.202/2024

நாள்: 07.02.2024

பொருள்: புதிய மனைப்பிரிவு பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம் துரைமங்கலம் மஜிரா கவுல்பாளையம் கிராமம் புல எண். 63/1A1, 63/1A2-ல் 1.50 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவு அமைத்திட மனைப்பிரிவிற்கு தொழிற்நுட்ப அனுமதி வழங்கி உத்தரவிடுதல் தொடர்பாக.

பார்வை : நாள்

1. திரு. செந்தில்குமார், பெரம்பலூர் என்பவரின் மனு 20.11.2023.
2. துணை இயக்குநர் நகர ஊரமைப்புத் துறை பெரம்பலூர் அவர்களின் கடிதம் எண்.ந.க.எண்.721/2023- P.D/2023TCP – நாள்:31.01.2024
3. துணை இயக்குநர் நகர ஊரமைப்புத் துறை பெரம்பலூர் அவர்களின் கடிதம் எண்.ந.க.எண். 721/2023- P.D/2023TCP
4. பதிவுத் துறை ஆவணம் எண்.9582/28.12.2023 ஆவணங்கள் ஒப்படைப்பு நாள்: 31.01.2024
5. துணை இயக்குநர் நகர ஊரமைப்புத் துறை பெரம்பலூர் அவர்களின் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு எண். ம.வ/ந.ஊ.அ.(பெ.மா) எண்.06/2024
6. துரைமங்கலம் மஜிரா கவுல் பாளையம் ஊராட்சி தீர்மானம் எண்.202/2024 நாள்: 07.02.2024

--------

<u>உத்தரவு:-</u>

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம் துரைமங்கலம் மஜிரா கவுல்பாளையம் ஊராட்சி கிராமம் புல எண். 63/1A1, 63/1A2-ல் 1.50ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவு அமைத்திட மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்குமாறு பார்வை 1-ல் காணும் மனுவில் மனுதாரரால் கோரப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் துணை இயக்குநர் நகர ஊரமைப்புத் துறை பெரம்பலூர் அவர்களின் கடிதத்தில் குடியிருப்புக்கான மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பொது பயன்பாட்டிற்கான இடம் ஆகியவற்றை தனியாரிடமிருந்து ஊராட்சி மன்ற தலைவர் துரைமங்கலம் மஜிரா கவுல்பாளையம் ஊராட்சி என்ற பெயருக்கு தானமாக பெற்றுக்கொண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பார்வை 4-ல் காணும் நாளில் சாலைகள் மற்றும் பொது இடத்தினை பதிவுத் துறையின் மூலம் பதிவு செய்து மனுதாரரால் முறையாக ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வை 5-ல் காணும் நகர ஊரமைப்புத்துறை கடிதத்தில் தெரிவித்துள்ளபடி இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு எண் அடிப்படையில் புல எண். 63/1A1, 63/1A2-ல் 1.50 ஏக்கர் பரப்பளவில் ஒதுக்கிய 35 மனைகளுக்கு மட்டும் பார்வை 6-ல் காணும் கிராம ஊராட்சி தீர்மானப்படி நகர ஊரமைப்புத் துறையால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 35 மனைகளுக்கு கூராய்வு கட்டணம் செலுத்தப்பட்டு உள்ளாட்சியின் பல்வகை ரசீது எண். நாள்: .2024-ஆம் தேதியன்று மனுதாரரால் ஊராட்சிக்கு செலுத்தப்பட்டதன் அடிப்படையிலும் மேற்படி புல எண்ணில் அமையவிருக்கும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி பத்திரப்பதிவு செய்ய இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

தலைவர்
தலைவர் கவுல்பாளையம் ஊராட்சி

தலைவர்
துரை மங்கலம் மஜிரா கவுல்பாளையம் ஊராட்சி
பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்:

திரு. செந்தில்குமார்
எண்.47G/4, வெங்கடேசபுரம் தெரு
பெரம்பலூர் மாவட்டம்-621 212.